நகராட்சி அலுவலகம்,
விக்கிரமசிங்கபுரம் நகராட்சி.
நாள் : 23/02/2026

<u>**சாதரணக் கூட்டம்**</u>

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் சாதரண கூட்டம் எதிர்வரும் **2026**ம் வருடம் **பிப்ரவரி** மாதம் **26** ம் தேதி **வியாழன் கிழமை** **காலை** 10.30 மணியளவில் **நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற சாதரணக் கூட்டத்திற்கான கூட்டப் பொருள்

**<u>பொருள் எண். 1 767</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் வார்டு அளவிலான சிறப்பு கூட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் மூன்று (3) கோரிக்கைகள் பெறப்பட்டு, அப்பணிகளை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண் 734 நாள் 26.11.2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் படி கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகள் மேற்கொள்ள , ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 18.02.2026 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 1,2,3,5,6,8,11 மற்றும் 16 பகுதிகளில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் 8 வது வார்டு பகுதியில் பேவர் பிளாக் சாலை பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் (மதிப்பீடு ரூ.14.80 இலட்சம்) ந.க.எண் **1678/ 2025 /இ 1** | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.02% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 0.32 % மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.02% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.ராஜா விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 767 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 2</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் வார்டு அளவிலான சிறப்பு கூட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் மூன்று (3) கோரிக்கைகள் பெறப்பட்டு, அப்பணிகளை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண் 734 நாள் 26.11.2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் படி கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகள் மேற்கொள்ள , ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 18.02.2026 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 2,7 பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் வார்டு 20 பகுதியில் சிறுமின் விசை மோட்டார் அறை அமைத்தல்<br>(மதிப்பீடு ரூ.5.00 இலட்சம்)<br>ந.க.எண் 1678/ 2025 /இ 1 | திரு. கே.ராஜா<br>ஒப்பந்தக்காரர்<br>விக்கிரமசிங்கபுரம் | 0.08%<br>மதிப்பீட்டைவிட<br>குறைவு |
| | | திருமதி. சுப்புலெட்சுமி<br>ஒப்பந்தக்காரர்<br>திருநெல்வேலி | 1.68%<br>மதிப்பீட்டைவிட<br>அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.08% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.ராஜா விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 768 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 3</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் வார்டு அளவிலான சிறப்பு கூட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் மூன்று (3) கோரிக்கைகள் பெறப்பட்டு, அப்பணிகளை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண் 734 நாள் 26.11.2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் படி கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகள் மேற்கொள்ள , ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 18.02.2026 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 9 , 13 மற்றும் 17 பகுதியில் மழைநீர் வடிகால் , சிறு பாலம் மற்றும் வார்டு 10, 14 பகுதியில் பேவர்பிளாக் சாலை மற்றும் பரரமரிப்பு பணி<br>(மதிப்பீடு ரூ. 14.00 இலட்சம்)<br>ந.க.எண் 1678/ 2025 /இ1 | திரு. கே.ராஜா<br>ஒப்பந்தக்காரர்<br>விக்கிரமசிங்கபுரம் | 0.02%<br>மதிப்பீட்டைவிட<br>குறைவு |
| | | திருமதி. சுப்புலெட்சுமி<br>ஒப்பந்தக்காரர்<br>திருநெல்வேலி | 0.3%<br>மதிப்பீட்டைவிட<br>அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.02% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.ராஜா விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 769 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 4</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் வார்டு அளவிலான சிறப்பு கூட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் மூன்று (3) கோரிக்கைகள் பெறப்பட்டு, அப்பணிகளை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண் 734 நாள் 26.11.2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் படி கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகள் மேற்கொள்ள ,

ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 18.02.2026 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 20 அருந்ததியர் தெருவில் கழிப்பிடம் அமைத்தல் (மதிப்பீடு ரூ. 6.50 இலட்சம்) ந.க.எண் 1678/ 2025 /இ1 | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.03% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 1.03% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.03% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.ராஜா விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 770 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 5</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் வார்டு அளவிலான சிறப்பு கூட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் மூன்று (3) கோரிக்கைகள் பெறப்பட்டு, அப்பணிகளை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் DMA/1208/2025/எம்ஏ1 நாள் 01.02.2026 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் படி கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகள் மேற்கொள்ள , ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 18.02.2026 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 4 மற்றும் 11 பகுதியில் புதிய எல்இடி தெருவிளக்கு அமைத்தல் (மதிப்பீடு ரூ. 6.50 இலட்சம்) ந.க.எண் 1678/ 2025 /இ1 | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.02% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 0.43% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.02% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.ராஜா விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 771 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்.6</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 14 கொட்டாரம் பகுதி மயான செல்லும் சாலை மிகவும் சிதிலமடைந்த நிலையில் உள்ளதால் அப்பகுதி மக்கள் மயானத்திற்கு செல்ல மிகவும் சிரமப்படுவதால், அப்பகுதி பொது மக்களின் நலன் கருதி மேற்கண்ட சாலையில் சிதிலமடைந்த பகுதியினை சிமெண்ட்

கான்கீரிட் கொண்டு சரி செய்யவும், மழைநீர் வடிகாலினை சரி செய்யவும் இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேணடியும் , பணி மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொதுமக்களின் நலன் மற்றும் பணியின் அவசியம் கருதியும் மேற்கண்ட சிதிலமடைந்த சாலை மற்றும் மழைநீர் வடிகாலினை சரி செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம், மேலும் பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 772 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 7</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மூலம் இந்நகராட்சி பகுதி 21 வார்டு பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட விநியோகத்திற்கு வார்டு பகுதிகளில் பயன்படுத்தப்பட்டு வரும் வால்வுகள் பழுதடைந்த நிலையில் உள்ளதால், இந்நகரில் உள்ள சில பகுதிகளுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனை தவிர்க்கும் பொருட்டு, இந்நகர் பகுதி மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக இந்நகர் பகுதியில் உள்ள குடிநீர் வால்வுகளை மாற்றம் செய்ய இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 3.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டியும் பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

குடிநீர் பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி, பழுதடைந்த வால்வுகளை மாற்றம் செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம், மேலும் பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 773 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 8</u>**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுறுத்துதலின்படி, தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு திடல்கள் மற்றும் திறவிடங்களின் விபரங்களை அரசு அரசிதழில் வெளியிடும் பொருட்டு, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பூங்காக்கள், விளையாட்டு திடல்கள் மற்றும் திறவிடங்களின் விபரங்கள் மற்றும் வரைபடங்கள் அடங்கிய கீழ்கண்ட பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது ந.க.எண். 4265/2025/எப்1.

| வ. எண் | பெயர் | அமைந்துள்ள இடம் | சர்வே எண் மற்றும் வார்டு எண் | பரப்பளவு (ச.மீ) | நிலத்தின் உரிமையாளர் | அரசு தனிநபர் தற்போதைய நிலைமை | யாருடைய பராமரிப்பில் உள்ளது | ஏற்கனவே அறிவிப்பு செய்யப்பட்டது எனில் அரசாணை எண் விவரம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பூங்கா | பூங்கா நகர் இருதயகுளம் வடக்கு தெரு | வார்டு 2 சர்வே எண் 485/21 | 1248,70 | நகராட்சி | காலியிடம் | நகராட்சி | - | - |
| 2 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பூங்கா | பூங்கா நகர் இருதயகுளம் வடக்கு தெரு | வார்டு 2 சர்வே எண் 485/22 | 985.1 | நகராட்சி | அம்ரூட் 2.0 2023-24 ன் கீழ் பசுமை பூங்கா அமைக்கப் பட்டுள்ளது | நகராட்சி | - | - |
| 3 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பூங்கா | பூங்கா நகர் இருதயகுளம் வடக்கு தெரு | வார்டு 2 சர்வே எண் 485/23 | 870.63 | நகராட்சி | காலியிடம் | நகராட்சி | - | - |
| 4 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பூங்கா | பூங்கா நகர் இருதயகுளம் வடக்கு தெரு | வார்டு 2 சர்வே எண் 485/24 | 1132,93 | நகராட்சி | காலியிடம் | நகராட்சி | - | - |
| 5 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பூங்கா | பூங்கா நகர் இருதயகுளம் வடக்கு தெரு | வார்டு 2 சர்வே எண் 485/ 30A1B | 483.89 | நகராட்சி | காலியிடம் | நகராட்சி | - | - |
| 6 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பூங்கா | அகஸ்தியர்புரம் ஆம்பூர் ரோடு | வார்டு 9 சர்வே எண் 200/ 8A1B | 335.97 | நகராட்சி | காலியிடம் | நகராட்சி | - | - |
| 7 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பூங்கா | அகஸ்தியர்புரம் ஆம்பூர் ரோடு | வார்டு 9 சர்வே எண் 200/ 8A1C | 377,20 | நகராட்சி | காலியிடம் | நகராட்சி | - | - |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பூங்கா | அகஸ்தியர்புரம் ஆம்பூர் ரோடு | வார்டு 9 சர்வே எண் 200/ 8A1D | 429.74 | நகராட்சி | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தில் 2021-22 கீழ் பூங்கா அமைக்க ப்பட்டுள்ளது | நகராட்சி | - | - |
| 9 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பூங்கா | அய்யனார்குளம் | வார்டு 2 சர்வே எண் 408/1 | 313,11 | நகராட்சி | காலியிடம் | நகராட்சி | - | - |

**அலுவலக குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண் : 774 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 9**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கும்போது தெருவிலுள்ள சாலைகளை தோண்டும் நேர்வில் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சாலை பராமரிப்பு கட்டணம் தொகையினை சென்னை நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 748/08/குவ2 நாள் 21.09.2009 ல் ஆண்டு தோறும் 5 % உயர்த்த அறிவுரை வழங்கி உள்ளார்கள்.எனவே ஏற்கனவே உள்ள 2024-25 ம் ஆண்டிற்கான சாலை பராமரிப்பு கட்டண தொகையில் 5 % உயர்த்தி 2026-27 ஆண்டிற்கு உயர்த்தி வசூல் செய்திட மன்றத்திள் அனுமதிக்கு

| நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணம் | கருங்கல் சாலை ரூ | தார்சாலை ரூ | சிமெண்ட்சாலை / பேவர்பிளாக் சாலை ரூ |
|---|---|---|---|
| 0 முதல் 30 மீட்டர் நீளத்திற்கு 2025–26 | 2298 | 4917 | 5683 |
| உயர்த்தப்பட்ட கட்டணம் 2026–27 | 2413 | 5163 | 5967 |
| 30 முதல் 90 மீட்டர் நீளத்திற்கு 2025–26 | 3606 | 6224 | 6983 |
| உயர்த்தப்பட்ட கட்டணம் 2026–27 | 3786 | 6535 | 7332 |

**அலுவலகக்குறிப்பு**

சென்னை நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின் படி, சாலை பராமரிப்பு கட்டணம் 01.04.2026 முதல் உயர்த்தி வசூல் செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் : 775 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 10**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் 9 கட்டமாக மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்புத்திட்டமான " உங்களுடன் ஸ்டாலின் முகாம்" நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி முகாம் நடத்தப்பட்டதில் இம்முகாமிற்கு பொதுமக்களுக்கு விநியோகம் செய்வதற்க்கான விண்ணப்படிவங்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் பற்றாக்குறையாக இருந்த காரணத்தினால் அச்சடிக்கப்பட்டது. மேலும் கூடுதலாக அச்சடிக்கப்பட்ட 6000 விண்ணப்படிவங்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் அச்சடித்தமைக்கான செலவினத்தொகை ரூ 84,960/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 3848/2025/F1)

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 776 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 11</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியின் 2024 – 2025 ம் ஆண்டுக்கான வருவாய் மற்றும் மூலதனநிதி மற்றும் குடிநீர் நிதி ஆகியவைகளுக்கான ஆண்டு கணக்குகள் (Annual Accounts) முடித்த வகைக்கு R.RESHMA.B.Com-CA, PF,GST,IT Consultant, Rajapalayam என்ற நிறுவனத்திற்கு ரூ 50,000/-ம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது (ந.க.எண்: 215/2026/பி1)

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 777 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 12 778</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:19245/2013/ஆர்1, நாள்:07.05.2024 ல் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022, பிரிவு 87 உட்பிரிவுகள்(a) முதல் (e) வரை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023,விதி எண்,267 (1) (2) மற்றும் (3) ல் சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ள இனங்கள் மற்றும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் விவரிக்கப்பட்டுள்ளது-

சொத்துவரி விலக்களிக்கப்பட்டுள்ள கட்டடங்களில், வழிபாட்டுத்தலங்கள், சுயநிதி கல்வி நிறுவனங்கள் தவிர்த்து மத்திய அல்லது மாநில அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் மாணவர் தங்கும் விடுதிகள் உட்பட கட்டடங்கள் , ஆதரவற்றோர் மற்றும் முதியோர் பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்படும் காப்பகங்கள் , குடியிருப்பு இல்லாமல் தொண்டு நோக்கத்துடன் செயல்படும் மருத்துவமனைகள் மற்றும் வரலாற்று மிக்க புரதான நினைவுச்சின்னங்கள் உள்ளிட்ட இனங்கள் இவ்வகைப்பாட்டில் அமைந்துள்ளன.

சொத்துவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ள இக்கட்டடங்களுக்கு கேட்பு இன்றி (Zero Demand) வரிவிதிப்பு எண்கள் வழங்கப்பட வேண்டிய நடைமுறைகள் முறையாக பின்பற்றப்பட வேண்டும். இத்தகைய சொத்துவரி விலக்களிப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பு, பாதளச்சசாக்கடை இணைப்புகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை சேவைக்கட்டணம் (SUC) போன்றவற்றிற்கான கேட்பு விடுதலின்றி எழுப்பி வசூலிக்கப்பட வேண்டும். அவ்வாறு கேட்பு எழுப்பப்படும் போது சொத்துவரி விதிப்பு எண் ஒதுக்கீடு செய்ய வேண்டியது அவசியமாகும்.

சொத்துவரி விலக்களிக்கப்பட்ட இனங்களுக்கு கேட்பின்றி (Zero Demand) வரிவிதிப்பு எண் ஒதுக்கீடு செய்யும்போது உரி ய ஆவணங்கள் மற்றும் தேவைப்படின் கள ஆய்வு மேற்கொண்டு கட்டடத்தின் பயன்பாட்டை உறுதி செய்து சம்பந்தப்பட்ட இனங்களுக்கு சொத்துவரி விதிப்பு எண்களை பதிவேற்றம் செய்ய நகராட்சி ஆணையர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து விக்கிரமசிங்கபுரம் நகராட்சி சொத்துவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ள இக்கட்டிடங்களுக்கு கேட்பு இன்றி (Zero Demand) கீழ்காணும் கட்டடங்களுக்கு குடிநீர் இணைப்பு மற்றும் திடக்கழிவு மேலாண்மை சேவைக்கட்டணம் (SUC) ஆகியவற்றிற்கான கேட்பு விடுதலின்றி

எழுப்பி வசூலிக்கவும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவி ற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்:402/2024/அ1)**

| **வ.எண்** | **வார்டுஎண்** | **விபரம்** |
|---|---|---|
| 1 | 10 | அனவன் குடியிருப்பு தேவேந்திர குல வேளாளர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட அருள்தரும் ஸ்ரீ முப்பிடாதி அம்மன் திருக்கோவில் |
| 2 | 10 | அனவன் குடியிருப்பு தேவேந்திர குல வேளாளர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட அருள்தரும் ஸ்ரீ பச்சாத்தி மாடசாமி கோவில் |
| 3 | 1 | பரிசுத்த பேதுரு ஆலயம், கொண்டபையன் பட்டி |
| 4 | 8 | பசுவைஅய்யா வைகுண்டர் தர்மபதி, பசுக்கிடைவிளை. |

**அலுவலக குறிப்பு:**

விக்கிரிமசிங்கபுரம் நகராட்சி சொத்துவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ள இக்கட்டடங்களுக்கு கேட்பு இன்றி (Zero Demad) வரிவிதிப்பு எண் வழங்கவும் , சொத்துவரி விலக்களிக்கப்பட்டுள்ள கட்டடங்களுக்கு குடிநீர் இணைப்பு, மற்றும் திடக்கழிவு மேலாண்மை சேவைக்கட்டணம்(SUC) ஆகியவற்றிற்கான கேட்பு விடுதிலின்றி எழுப்பி வசூலிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 778 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 13</u>**

செயலாளர் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் சென்னை அவர்களின் ந.க.எண் 2465/2023/தே1 நாள் 21.03.2025 ல், நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் பல்வேறு காரணங்களினால் 31.03.2025 வரை ஏற்பட்டுள்ள காலியிடங்களுக்கு தற்செயல் தேர்தல்கள் நடதிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் காலியாக உள்ள நியமனகுழு உறுப்பினர் தேர்ந்தெடுக்க 25.07.2025 அன்று நடைபெற்ற மறைமுக தேர்தலுக்காக, தமிர்நாடு தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின் படி, கண்காணிப்பு கேமிரா பொருத்தும் பணி மேற்கொள்ள பணியின் அவசரம் கருதி பெறப்பட்ட இரண்டு உள்ளூர் விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு. பணி மேற்கொண்டதற்கும், பட்டியல் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **வேலையின் விவரம்** | Agna Multi Solution **விக்கிரமசிங்கபுரம்** | Digitech **திருநெல்வேலி** |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலகத்தில் கண்காணிப்பு கேமிரா பொருத்தும் பணி | Rs, 72,770/- (ஜிஎஸ்டி உட்பட) | Rs, 70,859/- (ஜிஎஸ்டி உட்பட) |

**அலுவலகக்குறிப்பு**

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Digitech திருநெல்வேலி நிறுவனத்தின் விலைப்புள்ளியை அங்கீகரித்து. பணி மேற்கொண்டதற்கும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 779 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

<u>விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் 26.02.2026 சாதரண கூட்டத்தில் நகர்மன்றத் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மேஜை கூட்டப்பொருள் ( Table Agenda)</u>

**<u>பொருள் எண். 14</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் திருமதி. பீனா வின்செண்ட் 97D/8 கோடிஸ்வரன் நகர், சேரன்மகாதேவி ரோடு, திருநெல்வேலி டவுன் என்பவர், இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2 , சர்வே புல எண் 485/34A1B ல் 3.02 ஏக்கரில் மனைப்பிரிவாக மாற்றம் செய்ய நகர் ஊரமைப்பு துறை தொழில்நுட்ப அனுமதி வழுங்கப்பட்டு நகராட்சி மூலம் உரிய அனுமதி வழங்கிடும் வகையில் பெறப்பட்ட விண்ணப்பத்தின் படி நகர் ஊரமைப்பு துறை விதிகளுக்குட்பட்டு அடிப்படை வசதிகளான சாலை , மழைநீர் வடிகால், குடிநீர் பகிர்மான குழாய்கள் மற்றும் தெருவிளக்குகள் அமைக்கப்பட, முறையாக நகராட்சி மூலம் வழங்கப்படுகின்ற கேட்பு/ மதிப்பீட்டுத் தொகையினை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் , மேற்கண்ட மனைப்பிரிவிற்கான அனுமதி வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு ( ந.க.எண் 1806/2025/எப்1)

**அலுவலகக்குறிப்பு**

இணை இயக்குநர் நகர் ஊரமைப்புத்துறை திருநெல்வேலி அவர்களின் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் அடிப்படையில், விதிகளுக்குட்பட்டு உரிய அடிப்படை வசதிகள் மேற்கொள்ள வேண்டி உரிய தொகை பெற்று மேற்கண்ட மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 780 / மன்றம் அனுமதிக்கப்பட்டது . மேலும் அடிப்படைவசதிகளான சாலை, மழைநீர் வடிகால், குடிநீர் குழாய்கள், மற்றும் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு, மேற்கண்ட மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 15 781</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியின் 2025-26 ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு செலவு மற்றும் 2026-27 ம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது..

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கலாம்.,

**தீர்மான எண் : 781 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 16</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் தடை செய்யப்பட்ட நெகிழி விழிப்புணர்வு மற்றும் நெகிழி சேகரிப்புக்காக திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அலுவலக ந.க.எண் 1676/2023/கா2 நாள் 29.10.2025 ன் படி, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண் 1676/2023/கா2 நாள் 26.06.2025 மற்றும் 30.09.2025 ன் படி ரூ. 201000 நகராட்சி வங்கிக்கணக்கில் 23.05.2025, 09.10,2025 வரவு வைக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ. 201000 யினை நெகிழி விழிப்புணர்வு சேகரிப்புக்கு பயன் படுத்த மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 201000 நெகிழி விழிப்புணர்வு மற்றும் நெகிழி சேகரிப்பிற்கு செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 782 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**ஓம்/- S.P.M.செல்வசுரேஷ் பெருமாள்**

**நகர்மன்றத் தலைவர்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி